துணி, தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு, ஏட்டுகளாக, சப்-இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது, முன்னுரிமை கொடுக்கப்பட்டது கலைஞர் ஆட்சியில், அதை இப்போதும் செய்ய வேண்டும் என்று முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30].

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கோவளம் கிராமம் மாமல்லபுரம், முட்டுக்காடு போன்ற பகுதிகளில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஏதேனும் விபத்து ஏற்பட்டு விட்டால், செங்கற்பட்டில் இருந்து தான் தீயணைப்புப் படை வர வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கேயொரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மாம்பாக்கம் பகுதியில் 3 மாதங்களுக்கு முன்பு ஒரு விபத்தில் ஒரு சிறுவன் இறந்து விட்டான். அந்தச் சிறுவன் இறந்த உடனேயே அவனை எடுத்துச் செல்ல வாகன வசதி இல்லை. அந்தச் செய்தி கேட்ட உடனே வந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருநாள் பூராவும் அந்த இடத்திலேயே இருந்துஇருக்கிறார். மறுநாள் எனக்குத் தகவல் வந்து நான் போய் பார்த்தேன். அதுவரையில் அந்த பிணம் அங்கேயிருக்கிறது. இறந்து போய் 24 மணி நேரத்திற்குப் பிறகும் அந்தப் பிணம் அங்கே இருந்ததற்குக் காரணம் வாகன வசதி இல்லாதது தான். அதற்கு அந்த இன்ஸ்பெக்டர் கூட வருத்தப்பட்டார். இந்த மானியத்தில் எத்தனையோ லட்சங்கள் வாகன வசதிக்காக ஒதுக்கப்பட்டு இருப்பதால், அந்தப் பகுதிக்கு ஒரு வாகனம் வாங்கி வைக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

304. தமிழ்நாடு 1939–ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள், அறக்கட்டளைகள் துறையின் 19–12–1977ஆம் தேதியிடப்பெற்ற 2117 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

SATYAMEVA JAYATE / TRUTH ALONE TRIUMPHS